வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 18.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

ஊரக பகுதிகளின் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் குடியரசுத் தலைவர் உரையுடன் வரும் 31ஆம் தேதி தொடங்குகிறது.

உத்தரபிரதேஷ் மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்ப மேளாவில், இன்று மட்டும் 19 லட்சத்திற்கும் அதிகமானோர் புனித நீராடி உள்ளனர்.

காரைக்கால் கார்னிவெல் 2025 மினி மராத்தான் போட்டியை அமைச்சர் திரு. பி.ஆர்.என். திருமுருகன் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

-------------------------

*பிரதமர் 1 (18)*

ஊரக பகுதிகளின் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இதுகுறித்து சமூக வலைதளப் பதிவில், சிறந்த நிர்வாகம் மற்றும் தகவல் தொடர்பு வசதி, ஊரக பகுதி மேம்பாட்டிற்கு உத்வேகம் அளித்துள்ளதாக, குறிப்பிட்டுள்ளார். கிராமப்புறங்களில் உள்ள நிலங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டி உள்ள பிரதமர், ஸ்வாமித்வா

திட்டத்தின் கீழ், 65 லட்சம் சொத்துரிமை அட்டைகளை இன்று காணொலிக் காட்சி மூலம் வழங்கினார். தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய அவர், ஸ்வாமித்வா திட்டம் அமலுக்கு வந்த 5 ஆண்டுகளில், 2 கோடியே 25 லட்சம் சொத்து ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார். கிராமங்களில் தன்னாட்சியை முன்னெடுத்துச் செல்ல, தமது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுவதாக தெரிவித்த பிரதமர், நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களின் நிலங்கள் ட்ரோன் மூலம் வரைபடமாக ஆவணப்படுத்தப்பட்டு, கிராம மக்களின் கைகளில் அதற்கான சொத்துரிமை அட்டைகள் வழங்கப்படும் என தெரிவித்தார். ஊரகப் பொருளாதாரத்திற்கு ஸ்வாமித்வா திட்டம் இன்றியமையாதது என்று கூறிய பிரதமர், நாட்டில் உள்ள கிராமங்கள் இத்திட்டத்தினால் பெரிதும் பயனடையும் என குறிப்பிட்டார். அந்தமான் நிக்கோபார், புதுச்சேரி

*பிரதமர் 2 (4)*

உள்ளிட்ட 2 யூனியன் பிரதேசங்களிலும், 10 மாநிலங்களிலும் உள்ள 230க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில், சொத்துரிமை அட்டைகள், உரிமையாளர்களிடம் இந்நிகழ்ச்சியின் மூலம் இன்று வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

------------------------

*பட்ஜெட் கூட்டத் தொடர் (9)*

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 31ஆம் தேதி தொடங்குகிறது. இந்த ஆண்டின் முதல் கூட்டத் தொடர் என்பதால்,

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்ற உள்ளார். வரும் பிப்ரவரி 1ஆம் தேதி, மக்களவையில், 2025-26ஆம் நிதியாண்டிற்கான பொது பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தாக்கல் செய்ய உள்ளார். பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் பகுதி பிப்ரவரி 13ஆம் தேதி வரையிலும், அதனை தொடர்ந்து 2ஆவது பகுதி, மார்ச் 10ஆம் தேதி முதல், ஏப்ரல் 4ஆம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

*கும்பமேளா (8)*

உத்தரபிரதேஷ் மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்ப மேளாவில், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகளுக்கு அப்பாற்பட்டு, மேம்பட்ட மருத்துவ வசதிகளையும், யாத்திரிகர்கள், மற்றும், பக்தர்களுக்கு வழங்க, சிறப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. பிரயாக்ராஜ் கும்பமேளாவில் இன்று மட்டும் 19 லட்சத்திற்கும் அதிகமானோர் புனித நீராடி உள்ளனர். சென்னையைச் சேர்ந்த பக்தர்கள் சிலர், தங்களின் அனுபவங்கள் குறித்து எமது செய்தியாளரிடம் பேசுகையில், ஏற்பாடுகள் குறித்து மகிழ்ச்சி வெளியிட்டனர். இவர்கள் மேலும் கூறுகையில்.....

(வாய்ஸ்)

-------------------------

*மன் கீ பாத் (10)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் நாட்டு மக்களுடனும், தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், 118ஆவது மன் கீ பாத் எனும் – மனதின் குரல் நிகழ்ச்சி, நாளை, காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும், newsonair மொபைல் செயலி, தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் YouTube சேனல்களில் ஒளிபரப்பாகும். பிரதமரின் இந்தி உரையை தொடர்ந்து, பிராந்திய மொழிகளிலும் அந்தந்த வானொலி நிலையங்கள் ஒலிபரப்பும். மன் கீ பாத் உரையின் தமிழாக்கத்தை புதுச்சேரி மற்றும் தமிழக வானொலி நிலையங்கள் இரவு 8 மணிக்கும் மறு ஒலிபரப்பு செய்கின்றன.

-------------------------

குடியரசு தினம் (6)

புதுடெல்லியில் நடைபெறும் குடியரசு தினவிழாவில் பங்கேற்க நாடு முழுவதும் உள்ள தேசிய விருது பெற்ற கைவினைக் கலைஞர்களுக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. அந்த வகையில், புதுச்சேரியைச் சேர்ந்த கைவினைக் கலைஞர்கள் இருவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. குடியரசு தினவிழாவில் பங்கேற்க உள்ள வில்லியனூரைச் சேர்ந்த கைவினைக் கலைஞர் திரு. சேகர் எமது செய்தியாளரிடம் கூறுகையில்.....

(வாய்ஸ்)

-------------------------

*கார்னிவல்-காரைக்கால் (11)*

காரைக்கால் கார்னிவெல் 2025 திருவிழாவின் ஒரு பகுதியாக மினி மராத்தான் போட்டி இன்று காலை நடைபெற்றது. இப்போட்டியினை குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பி.ஆர்.என். திருமுருகன் கொடியசைத்து தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியின் போது, கார்னிவல் விழா 2025-ன் தலைவரும், மாவட்ட துணை ஆட்சியருமான திரு. அர்ஜூன் ராமகிருஷ்ணன், முதன்மை கல்வி அதிகாரி திருமதி விஜய மோகனா உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். 5 கிலோ மீட்டர் தூரம் நடைபெற்ற மராத்தான் போட்டியில், காரைக்காலைச் சேர்ந்த மாணவ-மாணவிகள், ஆசிரியர்கள், பொது மக்கள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

------------------------

*விழிப்புணர்வு* (9)

புதுச்சேரியை அடுத்த சேதராபட்டில் உள்ள தனியார் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு. பிரவீன் குமார் திரிபாதி, போக்குவரத்து காவல் கண்காணிப்பாளர் திரு. மோகன் குமார் ஆகியோர் கலந்து கொண்டு, தொழிற்சாலையில் பணிபுரியும் 150க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு, போக்குவரத்து விதிமுறைகளை கடைபிடிப்பது சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தினர். ஊழியர்கள் பணிக்கு வரும்போது கட்டாயம் தலைகவசம் அணிந்து வரவேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

-------------------------

ஜிவானந்தம் (7)

புதுச்சேரி அரசு செய்தி மற்றும் விளம்பரத் துறை சார்பில், பொதுவுடமை சிற்பி என போற்றப்படும் சுதந்திர போராட்ட வீரர் ஜீவானந்தம் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனையொட்டி, சாரம் அவ்வைத் திடலில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, அமைச்சர் சாய் ஜெ சரவணன் குமார், துணை சபாநாயகர் திரு. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-------------------------

ஏனாம் (7)

மத்திய அரசின் கல்வி நிறுவனமான ஜவஹர் நவோதயா பள்ளியில் 6ஆம் வகுப்பில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வு, இன்று, ஏனாம் பிராந்தியத்தில் உள்ள மகாத்மா காந்தி அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளி மற்றும் ராஜீவ் காந்தி அரசு ஆங்கில வழி உயர்நிலைப் பள்ளி ஆகிய இரு மையங்களில் நடைபெற்றது. இத்தேர்வினை எழுத 427 மாணவர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில், 297 மாணவர்கள் கலந்து கொண்டு தேர்வு எழுதியதாக எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

-------------------------

திருவையாறு (6)

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறில் சத்குரு ஸ்ரீதியாகராஜ ஸ்வாமிகளின் 178ஆவது ஆராதனை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பஞ்சரத்ன கீர்த்தனைகள் இசைத்தல் இன்று நடைபெற்றது. திருவையாறு காவிரி கரையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஏராளமான இசை கலைஞர்கள் கலந்து கொண்டு, கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜருக்கு இசை அஞ்சலி செலுத்தினர்.

-------------------------

வானிலை (7)

தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, கடலோர தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைப் பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்தமிழக கடலோரப் பகுதிகள், குமரிக்கடல், மன்னார் வளைகுடா பகுதிகளில் பலத்த சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால் இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

-------------------------

தேர்தல் (5)

70 உறுப்பினர்களை கொண்ட டெல்லி சட்டப் பேரவை தேர்தலுக்கான வேட்பு மனு பரிசீலனை இன்று நடைபெற்றது. இத்துடன் ஈரோடு கிழக்கு சட்டப் பேரவைத் தொகுதிக்கும் நடைபெற உள்ள இடைத்

தேர்தலுக்கான வேட்பு மனுக்களும் இன்று பரிசீலிக்கப்பட்டன. மனுக்களை திரும்ப பெற வரும் 20ஆம் தேதி கடைசி நாளாகும்.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஊரக பகுதிகளின் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் குடியரசுத் தலைவர் உரையுடன் வரும் 31ஆம் தேதி தொடங்குகிறது.

உத்தரபிரதேஷ் மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்ப மேளாவில், இன்று மட்டும் 19 லட்சத்திற்கும் அதிகமானோர் புனித நீராடி உள்ளனர்.

காரைக்கால் கார்னிவெல் 2025 மினி மராத்தான் போட்டியை அமைச்சர் திரு. பி.ஆர்.என். திருமுருகன் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

------------------------